செய்தி வெளியீடு எண்:398 நாள் : 06.08.2016

செய்தி வெளியீடு

**டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப.**
**நிர்வாகஇயக்குநர்**

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அரசு இருதய மருத்துவமனைகளுக்கு (Cardilogy) அனுபவம் பெற்ற, கண்சல்டண்ட், சிறப்பு மருத்துவர்கள், மயக்க மருத்துவர்கள் (Anaesthesia), தீவிர கண்காணிப்பு பிரிவு (ICU) மருத்துவர்களும், ரெசிடெண்ட் மருத்துவப் பிரிவில் எம்பிபிஎஸ் + டிப்ளமோ, எம்பிபிஎஸ் + முதுநிலை பட்டம் தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். மேலும், இருதயப் பிரிவு டெக்னிசியன்களான பர்பியூசனிஸ்ட், கேத்லேப், கார்டியக் எக்கோ, கார்டியக் மயக்க மருத்துவம், ரெஸ்பிரேட்டரி தெரபிஸ்ட் மற்றும் பிஎஸ்சி தேர்ச்சியுடன் 3 வருட அனுபவத்துடன் 35 வயதிற்குட்பட்ட பெண் செவிலியர்களுக்கான நேர்முகத் தேர்வு புதுடில்லியில் 9.8.2016 & 10.8.2016 ஆகிய நாட்களிலும், பெங்களூருவில் 12.8.2016 மற்றும் 13.8.2016 ஆகிய நாட்களில் நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் கண்சல்டண்ட் மருத்துவர்களுக்கு ரூ.4,10,000 முதல் ரூ.5,42,000 வரையிலும், சிறப்பு மருத்துவர்களுக்கு ரூ.2,46,000/- மற்றும் ரெசிடெண்ட் மருத்துவர்களுக்கு ரூ.1,13,000 முதல் ரூ. 1,30,000 வரை மாத ஊதியத்துடன் குடும்ப விசாவும், டெக்னிசியன்களுக்கு ரூ.1,85,000 மற்றும் செவிலியர்களக்கு ரூ.72,000 வரையிலும், இலவச விமான பயணச்சீட்டு, இலவச இருப்பிடம் மற்றும் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகளும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு உரிய தகுதி மற்றும் விருப்பமிருப்பின், தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட். மற்றும் ஒரு புகைப்படத்தினை ovemclsn@gmail.com என்ற ஈமெயில் வாயிலாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விரிவான தகவல்களுக்கு www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்திலோ அல்லது **044-**22505886/22502267/22500417/8220634389 ஆகிய தொலைபேசி எண்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண்.RC No. BN-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84 ஆகும்.

**ஒப்பம்**

**நிர்வாக இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**